भारतीय गैर न्यायिक

भारत

बीस रुपये

Rs.20

रु.20

TWENTY RUPEES

सत्यमेव जयते

INDIA

INDIA NON JUDICIAL

தமிழ்நாடு तमिलनाडु TAMIL NADU

81AB 443892

3199
25/12/19

Arasu Educational and charitable trust pattukkottai

S. [signature]

சு. ஜெ. ரவிக்குமார்
முத்திரைத்தாள் விற்பனையாளர்
உரிமம் எண்: 13791 / 86
181. பழனியப்பன் தெரு
பட்டுக்கோட்டை

## வாடகை ஒப்பந்தப் பத்திரம்

2020-ம் வருடம், மார்ச் மாதம் 10-ம் தேதி (பத்தாம் தேதி) தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம் வெண்டாக்கோட்டை, நடுத் தெரு என்ற முகவரியில் வசிக்கும் A.முருகையன் 1-வது நபர்.

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், களத்தூர் கிழக்கு முகவரியில் வசித்துவரும் கே.சிவநேசன் குமாரர் S.நாடிமுத்து-2வது நபர் ஆகிய நாம் இருவரும் சேர்ந்து செய்து கொண்ட வாடகை ஒப்பந்தப்பத்திரம்.

நம்மில் 1-வது நபருக்கு தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை நகரம் பெரிய தெருவில் 149-B என்ற முகவரியில் சொந்தமும், பாத்தியமும், அனுபவமும் உள்ள கட்டிடத்தின் 2-வது தளம் மாடி பகுதி முழுவதும் கடையாகும்.

அதை நம்மில் 2-வது நகர்1-வது நபரிடம் ARASU EDUCATIONAL AND CHARITABLE TRUST (ARASU INSTITUTIONS) என்ற பயிற்சி நிறுவனம் தொழில் செய்து வர வாடகைக்கு கேட்டு 1-வது நபரும் வாடகைக்கு கொடுப்பதாக ஒப்புக் கொண்டு கீழ்கண்ட நிபந்தனைகளை அனுசரித்து இந்த வாடகை உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டுள்ளோம்

| | |
|---|---|
| 1-வது நபர் | 2-வது நபர் |
| A. Murugayan. | [signature] |

1. வாடகை ஒப்பு கொண்டுள்ள இரண்டாவது தளத்திற்கு முன்பணம் ரூ.30,000 (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்).

2. 2-வது நபர் வாடகைக்கு ஒப்புக் கொண்டுள்ள கடைக்கு மாத வாடகை ரூ.7,500/- (ரூபாய் ஏழாயிரத்து ஐந்நூறு மட்டும்) என்ற ஒப்புக்கொள்ளப்பட்டு அதற்காக கடைக்கு அந்தந்த மாத வாடகையை அடுத்த ஆங்கில மாதம் 5-ம் தேதிக்குள் தங்களிடமோ, தங்களின் உத்தரவு பெற்றவர்களிடமோ, செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவேண்டியதாகும்.

3. மேற்படி கடையில் தொழிலை தவிர வேறு எந்தவித தொழிலும் செய்ய பயன்படுத்தமாட்டேன்.

4. மேற்படி கடையில் அமைந்திருக்கும் மின் இணைப்பிற்குறிய தொகையை நானே தங்கள் பெயரில் செலுத்தி அதற்குறிய ரசீதை தங்களிடம் ஒப்படைத்து விடுவேனாகவும்.

5. தங்களின் எழுத்து மூலமாக அனுமதியின்றி கடையில் எவ்வித மாற்றமும் செய்யமாட்டேன எனவும்,

6. கடையை எந்தக் காரணத்தைக் கொண்டும், வேறு எவருக்கும் உள்வாடகைக்கு விடவோ அல்லது வேறு நபருக்கு மாற்றிக் கொடுக்கவோ மாட்டேன் என்றும் உறுதி கூறுகிறேன்.

7. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கூடுதலாக வைப்பீடு தொகை செலுத்த வேண்டியிருந்தால் அதை நானே செலுத்திக் கொள்வேனாகவும்.

8. கடையில் அரசு சட்ட திட்டங்களுக்கு விரோதமாக எவ்வித தொழிலும் செய்யமாட்டேன் என்றும், மேற்படி இடத்தை தாங்கள் வேண்டும்போது பார்வையிட அனுமதிப்பேன் என்றும் உறுதி கூறுகிறேன்.

9. இந்த ஒப்பந்த பத்திரம் 10.03.2020 முதல் 09.03.2023 வரை மட்டுமே செல்லத்தக்கது என்றும், மீண்டும் எங்களுக்கு கடை தேவைப்பட்டால் நான் மூன்று மாதத்திற்கு முன்பே தங்களிடம் கேட்டு இந்த உடன்படிக்கையை புதுப்பித்துக் கொள்வேனாகவும்.

10. மேற்படி நிபந்தனைகளை என் முழுமனதுடன் ஏற்றுக் கொண்டு என் கடையைப்போல் பாவித்து நடப்பேன் என்றும், இதில் ஏதேனும் ஒரு நிபந்தனையை மீறும் பட்சத்தில் தாங்கள் எனக்கு எவ்வித முன்னறிவிப்பும் இன்றி கடையை காலி செய்வதற்கு உரிமையுண்டு என்பதை ஒப்புக்கொண்டு நான் தங்களுக்கு இந்த வாடகை ஒப்பந்த பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளேன். இதன் ஜெராக்ஸ் நகல் என்னிடம் உள்ளது.

1-வது நபர்
A. Murugaiyan.

2-வது நபர்
[signature]

சாட்சிகள்

1. [signature] (N. Kavitha)
2. [signature] (N. NANCY)